Regional Bulletin / Puducherry / Tamil Script / 15.06-2024

**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

தேதி : 15.06.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது இத்தாலி பயணத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பினார்.

விவசாயிகளுக்கான கிசான் சம்மான் திட்டத்தின் கீழ், வரும் 18 ஆம் தேதி 20 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கப்பட உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், உலகத் தரம் வாய்ந்த கழிவு நீர் வடிகால் அமைப்புகள் உருவாக்கப்பட உள்ளதாக துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

புதிய பேருந்து நிலைய கட்டுமான பணி காரணமாக ஏஎப்டி மைதானத்தில் இருந்து நாளை முதல் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

மோடி (14)

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது இத்தாலி பயணத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பினார். இத்தாலியில் நடைபெற்ற ஜி-7 உச்சி மாநாட்டில் பங்கேற்ற பிரதமர், இத்தாலி, அமெரிக்கா, பிரான்ஸ், உக்ரேன் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். எதிர்கால சந்ததிக்கு ஒளி மயமான உலகத்தை உருவாக்க ஒருங்கிணைந்து பாடுபட அனைவரும் உறுதியேற்றதாக அவர் சமூக ஊடகப்பதிவில் கூறியுள்ளார். ஆப்பிரிக்கா உள்ளிட்ட உலகின் தெற்கு நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார். இந்த மாநாட்டில் பல்வேறு பிரச்சனைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ள பிரதமர், உலகலாவிய நன்மைக்கான அம்சங்கள் இந்த விவாதங்களில் இடம் பெற்றதாகவும் தெரிவித்தார். இந்த பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாகவும், சம்பந்தப்பட்ட

நாடுகளுடனான நல்லுறவை வலுப்படுத்தும் வகையில் இருந்ததாகவும் கூறியுள்ளார்.

*அமித் ஷா* (9)

ஜம்மு-காஷ்மீர் மாநில பாதுகாப்பு நிலைமை குறித்து, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டம் புதுடெல்லியில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தினை தொடர்ந்து நாளை ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல், மத்திய உள்துறை செயலாளர், ராணுவம் மற்றும் காவல் துறைகளை சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்கும் உயர் நிலைக்குழு கூட்டம் நாளை நடைபெற உள்ளது. இதில், ஜம்மு காஷ்மீர் பாதுகாப்பு குறித்தும், அமர்நாத் யாத்திரைக்கான தயார் நிலை குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

18 ஆவது மக்களவையின் முதல் கூட்டத் தொடர் வரும் 24 ஆம் தேதி தொடங்க உள்ள நிலையில், நாடாளுமன்றத்தின் மாண்பினை காக்கும் வகையில் புதிய உறுப்பினர்கள் செயல்படுவார்கள் என்று தாம் நம்புவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார். அவை நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற அனைத்து கட்சிகளுடன் இணைந்து பணியாற்றுவதை அரசு ஆர்வத்துடன் எதிர்நோக்கி இருப்பதாகவும் அவர் தமது சமூக வலைத்தள பதிவில் தெரிவித்துள்ளார். இத்தொடரின் முதல் நாளில் புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்பதோடு, மக்களவை தலைவர் தேர்தலும் நடைபெற உள்ளது. இதனை தொடர்ந்து குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இரு அவைகளின் கூட்டு கூட்டத்தில் உரையாற்றுவார். இதனிடையே, 18 ஆவது மக்களவை தேர்தலுக்கு பின்னர் மாநிலங்களவையின் முதல் கூட்டம் வரும் 27 ஆம் தேதி தொடங்க உள்ளதாகவும், இரு அவைகளும் அடுத்த

மாதம் 3 ஆம் தேதி வரை நடைபெறும் என்றும் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

*சவுகான்* (14)

பிரதமர் திரு நரேந்திர மோடியின் விவசாயிகளுக்கான வேளாண் கடனுதவி திட்டமான கிசான் சம்மான் நிதி திட்டத்தின் கீழ், வரும் 18 ஆம் தேதி, 20 ஆயிரம் கோடி ரூபாயை விடுவிக்க உள்ளதாக மத்திய வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 9 கோடியே 3 லட்சம் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் இந்த தொகை செலுத்தப்படும் என்றார். கடந்த 10 ஆண்டுகளில் 11 கோடி விவசாயிகளின் வங்கி கணக்குகளில் 3 லட்சம் கோடி ரூபாய் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் அனைத்து மாநில முதல்வர்களும் பங்கேற்க கடிதம் அனுப்பப்பட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் விவசாயிகள் நலன் சார்ந்த திட்டங்கள்

குறித்தும், புதிய அரசின் 100 நாள் பணித் திட்டம் பற்றியும் வேளாண் அமைச்சக அதிகாரிகளிடம் தாம் கலந்து ஆலோசித்து, ஆய்வு செய்ததாகவும் அமைச்சர் கூறினார்.

யோகா (11)

சர்வதேச யோகா தினம் வரும் 21 ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி, அர்த்த சக்காரசனம் குறித்த யோகாசன நிலைகளை பிரதமர் திரு நரேந்திர மோடி தனது எக்ஸ் வலைதளத்தில் இன்று பதிவிட்டுள்ளார். ஆரோக்கியமான இதயம், சீரான ரத்த ஓட்டத்திற்காக மக்கள் இந்த யோகாசன பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தி உள்ளார்.

இதனிடையே, இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் 10 நாள் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, கொழும்பில் குடும்பத்திற்கான யோகா என்ற தலைப்பின் கீழ் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்றனர். சுவாமி விவேகானந்தர் கலாச்சார மையத்தின்

சார்பில் இந்த யோகா சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

*திரைப்பட விழா (14)*

சர்வதேச திரைப்பட விழா மும்பையில் உள்ள திரைப்பட வளாகத்தில் இன்று தொடங்கியது. முதன் முறையாக சென்னை, டெல்லி, கொல்கத்தா, புனே நகரங்களிலும் மும்பை விழாவில் திரையிடப்படும் படங்கள் அனைத்தும் திரையிடப்பட உள்ளன. வரும் 21 ஆம் தேதி வரை நடைபெறும் இவ்விழாவில் 30 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர். 118 திரைப்படங்கள் இடம்பெற உள்ளன. சார்லி ஹாம்பிள்டன் ஜேம்சின், "பில்லி அன்ட் மோலி" என்ற ஆவண திரைப்படத்துடன் இவ்விழா தொடங்கியது. விழாவில் கலந்து கொண்ட செய்தி மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் இந்த ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது, "லிவ்விங் ஆன் த எட்ஜ்"

திரைப்படத்திற்காக, சென்னையை சேர்ந்தவரும், வன விலங்குகள் பற்றிய திரைப்படங்கள் இயக்குவதில் புகழ் பெற்றவருமான, திரு சுப்பையா நல்லமுத்துவிற்கு வழங்கப்படுவதாக அறிவித்தார்.

*பயிற்சி நிறைவு* (9)

பாதுகாப்புப் படை அதிகாரிகள் நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் குறித்து முழுமையாக அறிந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை விமானப்படை தளபதி ஏர் சீப் மார்ஷல் வி ஆர் சவுத்ரி வலியுறுத்தி உள்ளார். ஐதராபாத் அருகே உள்ள விமானப்படை அகடமியில் நடைபெற்ற பயிற்சி நிறைவு பேரணியில் கலந்து கொண்டு பேசிய அவர், பாதுகாப்பு தொடர்பான விஷயங்களில் இணைய தொழில் நுட்பம் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் கூறினார். எதிர்காலத்தில் ஒரு போரில் வெற்றி பெறுவதற்கு இணைய தொழில் நுட்பங்கள் இன்றியமையாததாகும் என்றும் திரு சவுத்ரி தெரிவித்தார்.

இடைத்தேர்தல் (5)

தமிழகத்தின் விக்ரவாண்டி சட்டபேரவை தொகுதி இடைத்தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் பாமக மாநில துணை தலைவர் திரு சி அன்புமணி போட்டியிடுவார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. அடுத்த மாதம் 10 ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில், வேட்பு மனு தாக்கல் நேற்று தொடங்கி, வரும் 21 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

*பல்கலைக் கழக மானி□க்குழு* (11)

ஒரு கல்லூரியில் சேர்ந்த பின்னர் மற்றொரு கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள் செலுத்திய கட்டணத்தை உயர் கல்வி நிறுவனங்கள் திருப்பி செலுத்துவதற்கான புதிய நெறிமுறையை பல்கலைக் கழக மானியக்குழு அறிவித்துள்ளது. இதன்படி, நடப்பு ஆண்டில் செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி வரை மாணவர்களுக்கு கட்டணங்களை முழுமையாக திருப்பி செலுத்த வேண்டும் என்று

அறிவிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 30 ஆம் தேதிக்கு பின்னர் அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி வரை அதிகபட்சமாக ஆயிரம் ரூபாயை குறைத்துக் கொண்டு கட்டணத்தை திருப்பி செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் இருந்து பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் பல்கலைக் கழக மானியக்குழு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

*துணை நிலை ஆளுநர்* (19)

புதுச்சேரியில் மத்திய மாநில அரசுகளின் பங்களிப்போடு பாரம்பரியம் மாறாமல் புதுப்பிக்கப்பட்டு வரும் நகராட்சி கட்டிடம், பழைய வடிசாலை கட்டிட வளாகம், வஉசி பள்ளி, கலவை கல்லூரி மற்றும் காமராஜர் மணிமண்டபம் உள்ளிட்ட கட்டிடங்களை துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று பார்வையிட்டார். அப்போது அதிகாரிகளுக்கு சில அறிவுரைகளை வழங்கினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், கழிவு நீரை வெளியேற்றுவதில் என்னென்ன

பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்க வேண்டும் என்பது குறித்தும், கழிவு நீர் ஓட்டம் இல்லாத இடங்களில் அதை உறிந்து எடுப்பதற்கான இயந்திரங்களை வரவழைப்பது குறித்தும் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டுள்ளதாக கூறினார். சூரத் உள்ளிட்ட நகரங்களில் இருந்து நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு, உலகத் தரம் வாய்ந்த கழிவு நீர் வடிகால் அமைப்புகள் உருவாக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். தற்போது உள்ள ஆளுநர் மாளிகையும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த அவர், கோவில் நிலங்களை அபகரிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார். ஆய்வின் போது பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், தலைமை செயலர் திரு சரத் சவுகான், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் உள்ளிட்ட உயரதிகாரிகள் உடனிருந்தனர்.

போக்குவரத்து மாற்றம் (13)

புதுச்சேரி உருளையன்பேட்டை மறைமலையடிகள் சாலையில் உள்ள பேருந்து நிலையத்தில் கட்டுமான பணிகள்

முடியும் வரை, புதுச்சேரி-கடலூர் சாலையில் உள்ள ஏஎப்டி மைதானத்தில் இருந்து நாளை முதல் பேருந்துகளை இயக்க வேண்டும் என்று புதுச்சேரி நகராட்சி அறிவித்துள்ளது. இதனை ஒட்டி, போக்குவரத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, கடலூர் சாலையில் வெங்கடசுப்பா ரெட்டியார் சதுக்கத்தில் இருந்து முதலியார்பேட்டை ரயில்வே கேட் வரை உள்ள சாலையின் இருபுறங்களிலும் எந்தவித வாகனங்களையும் தற்காலியமாக நிறுத்த கூடாது. பேருந்துகள், ஆட்டோ, டெம்போ, இருசக்கர வாகனங்கள் உள்ளிட்டவை அவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டுமே நிறுத்த வேண்டும் என்றும், இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு போக்குவரத்து காவல் கண்காணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கிரிக்கெட் (7)

இன்று இரவு 8 மணிக்கு ப்ளோரிடாவில் நடைபெற உள்ள ஐசிசி உலகக் கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டில் இந்தியா தனது கடைசி லீக் ஆட்டத்தில் கனடாவை எதிர் கொள்கிறது. குருப் ஏ பிரிவில் இடம் பெற்றுள்ள இந்தியா ஏற்கனவே சூப்பர் 8 சுற்றுக்கு முன்னேறி உள்ளது.

இதனிடையே, அமெரிக்கா-அயர்லாந்து இடையிலான போட்டி மழையால் ரத்து செய்யப்பட்டதை அடுத்து, 3 போட்டிகளில் 1 வெற்றியை மட்டும் பதிவு செய்த பாக்கிஸ்தான், தொடரில் இருந்து வெளியேறியது.

டென்னிஸ் (6)

ரஷ்யாவின் கசானில் நடைபெற்று வரும் 2024 ஆம் ஆண்டுக்கான ப்ரிக்ஸ் விளையாட்டு போட்டிகளில், மகளிர் டேபிள் டென்னிஸ் பிரிவில், வெண்கல பதக்கம் வென்ற இந்திய

அணிக்கு மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த போட்டிகளில் இந்தியா பெறும் முதல் பதக்கம் இது என்பது குறிப்பிடத் தக்கது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது இத்தாலி பயணத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பினார்.

விவசாயிகளுக்கான கிசான் சம்மான் திட்டத்தின் கீழ், வரும் 18 ஆம் தேதி 20 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கப்பட உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், உலகத் தரம் வாய்ந்த கழிவு நீர் வடிகால் அமைப்புகள் உருவாக்கப்பட உள்ளதாக துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

புதிய பேருந்து நிலைய கட்டுமான பணி காரணமாக ஏளப்டி மைதானத்தில் இருந்து நாளை முதல் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.